Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror www.tamilmirror.lk

MONDAY, MAY 08, 2023

திங்கட்கிழமை மே 08, 2023 | ஒளி: 08 கதிர்: 265 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | Free


## சா/ பரீட்சை அட்டவணை

மே மாத இறுதியில் இடம்பெறவுள்ள க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கான நேர அட்டவணையை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது. அதற்கமைய எதிர்வரும் 29ஆம் திகதி ஆரம்பமாகும் பரீட்சைகள் 10 நாள்களுக்கு நடைபெறும் என்றும் மே 29ஆம் திகதி முதல் ஜூன் 8ஆம் திகதி வரை பரீட்சைகள் நடைபெறும் என்றும் அமைச்சு அறிவித்துள்ளது.

பரீட்சைகள் காரணமாக பாடசாலைகளுக்கு இந்த மாதம் 26ஆம் திகதி முதல் விடுமுறை வழங்கப்படும் என்றும் ஜூன் 12ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பமாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### கண் அறுவை சிகிச்சை செய்தவர்களில்

# 10 பேரின் பார்வை பாதிப்பு



■ டி.சந்ரு, செ.திவாகரன்

கண் சத்திரசிகிச்சை செய்யப்பட்ட 10 நோயாளர்களின் பார்வை பாதிப்பு ஏற்பட்டுள்ள சம்பவம் நுவரெலியாவில் பதிவாகியுள்ளது. இவர்கள், நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை செய்துகொண்டவர்கள் எனத் தெரியவருகின்றது. கண் சத்திரசிகிச்சை செய்துகொண்ட 10 நோயாளர்கள், உரிய பார்வை கிடைக்காமல், தொடர்ந்து வைத்தியசாலையில் தாங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர். தொடர்ச்சி P2

## பாரியாருடன் பறந்தார் பசில்



முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்‌ஷவும் அவரது மனைவி புஷ்பா ராஜபக்‌ஷவும் கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக அமெரிக்கா நோக்கி பயணித்தாக விமான நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஞாயிற்றுக்கிழமை (07) அதிகாலை எமிரேட்ஸ் விமான நிறுவனத்துக்கு சொந்தமான ஈகே 649 என்ற விமானத்தில் அதிகாலை 03.15 மணியளவில் டுபாய் நோக்கி பயணித்தாக தெரியவருகிறது.

## புதிய நியமனங்கள் ஆட்சிக்கு வழிசமைக்காது



புதிதாக ஆளுநர்கள், அமைச்சர்களை நியமிப்பதன் ஊடாக, தற்போதைய அரசாங்கம் மீண்டும் ஆட்சிக்கு வரமுடியாது. அதேபோல, நடத்தப்படும் எந்தவொரு தேர்தலிலும் வெற்றியீட்டவும் முடியாது என்று பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

ஹட்டனில் ஞாயிற்றுக்கிழமை (07) இடம்பெற்ற தெளிவூட்டல் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ச்சி P2

## இம்மாத 3ஆம் வாரத்தில் இறுதி அறிக்கை



உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணய குழுவின் இறுதி அறிக்கை மே மாதம் மூன்றாம் வாரத்தில் இறுதி செய்யப்பட்டு கையளிக்கப்படும் என்று குழுவின் தலைவர் மஹிந்த தேஷப்பிரிய தெரிவித்தார்.

தமது இடைக்கால அறிக்கை தொடர்பில் பல்வேறு தரப்பினரிடம் இருந்து தற்போதுவரையில் 400 க்கும் மேற்பட்ட யோசனைகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் குறித்த யோசனைகள் தொடர்பான தமது பதில்களை விரைவில் பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். தொடர்ச்சி P2



## மூன்றாம் சார்ள்ஸ் மன்னருக்கு ஜனாதிபதி ரணில் பாராட்டு

மூன்றாம் சார்ள்ஸ் மன்னரின் பங்கேற்புடன் லண்டனில் வெள்ளிக்கிழமை (05) நடைபெற்ற பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது பாரியார் மைத்திரி விக்கிரமசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர். தொடர்ச்சி P2

### உரக்கொள்வனவுக்கான

## வவுச்சர் வழங்க ஜனாதிபதி அனுமதி


**அமைச்சரவைக்கு இன்று யோசனை**



இந்த ஆண்டு சிறுபோக செய்கைக்கு தேவையான உரத்தை கொள்வனவு செய்வதற்கு வவுச்சர் வழங்குவதற்கான அனுமதியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கியுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். மேலும், விவசாயிகளுக்கு வவுச்சர் வழங்குவது தொடர்பான யோசனையை திங்கட்கிழமை (08) அமைச்சரவை அனுமதிக்காக முன்வைக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார். தொடர்ச்சி P2

## நாட்டில் தொற்று நோய்கள் அதிகரிப்பு

**கொவிட் மரணமும் உயர்வு**



தற்போது நிலவும் மழையுடன் கூடிய வானிலையுடன் சிறுவர்களுக்கு வயிற்றுப்போக்கு போன்ற நோய்கள் அதிகரித்து வருவதாக கொழும்பு சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளரும் சிறுவர் வைத்திய நிபுணருமான டொக்டர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார். மழையுடன் ஈக்களின் பெருக்கம் அதிகரித்துள்ளமையே இந்நோய்களுக்கு காரணம் என்றும் சிறு குழந்தைகளை இவ்வாறான நோய்களில் இருந்து பாதுகாக்க சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றுவது மிகவும் முக்கியம் என்றும் அவர் அறிவித்துள்ளார். தொடர்ச்சி P2

### ரயில் கடவையில் இருந்து

## சிறுமியின் சடலம் நிர்வாணமாக மீட்பு

**இளைஞருக்கு வலை**



களுத்துறை தெற்கு பிரதேசத்தில் காலி வீதியை அண்மித்து காணப்படும் ஹோட்டல் ஒன்றுக்கு பின்பகுதியிலுள்ள ரயில் கடவையில் இருந்து நிர்வாணமாக சிறுமி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். களுத்துறை, நாகொட பகுதியைச் சேர்ந்த 16 வயது சிறுமியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தம்பதியினர், இளைஞர் மற்றும் குறித்த சிறுமி ஆகியோர் சனிக்கிழமை (06) மாலை குறித்த ஹோட்டலில் இரு அறைகளில் தங்கியுள்ளனர். தொடர்ச்சி P2



### வெடுக்குநாறி விவகாரம்

## உயர்நீதிமன்றை நாட வீரசேகர தீர்மானம்

வவுனியா, வெடுக்குநாறிமலையில் சேதங்களை விளைவித்தமைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தை நாடவுள்ளதாக முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2

## இலங்கையின் வறுமை வீதம் இரட்டிப்பாகியது




இலங்கையின் வறுமை வீதம் 13.1 சதவீதத்தில் இருந்து 25 சதவீதமாக இரட்டிப்பாக்கியுள்ளதாக உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2021 இல் தொடர்ந்து அதிகரித்த குறித்த வீதம், பின்னர் 2021 மற்றும் 2022 க்கும் இடையில் 13.1 இலிருந்து 25 சதவீதமாக அதிகரித்தாக தொடர்ச்சி P2



### 10 இலங்கையர்கள்

## தனுஷ்கோடியில் தஞ்சமடைந்தனர்

இலங்கையில் இருந்து சட்டவிரோதமான படகின் மூலம் தனுஷ்கோடி பகுதிக்கு வந்த மூதாட்டி, குழந்தைகள் மற்றும் பெண்கள் உள்ளிட்ட தமிழர்கள் 10 பேரை மண்டபம் மெரைன் பொலிஸார் மீட்டுள்ளனர். இராமநாதபுரம் மாவட்டம், தனுஷ்கோடி, அரிச்சல் முனை அருகே 1ஆம் எண் மணல் தீடையில் சனிக்கிழமை (06) வந்திறங்கிய இலங்கையைச் சேர்ந்த குழந்தைகள், தொடர்ச்சி P2

## 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

நாட்டின் 5 மாவட்டங்களுக்கு திங்கட்கிழமை (08) காலை 9 மணிவரையான 24 மணி நேரத்துக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம், ஞாயிற்றுக்கிழமை (07) தெரிவித்தது. மாத்தளை, பதுளை, குருநாகல், கேகாலை, காலி ஆகிய மாவட்டங்களுக்கு இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2

## தையிட்டி விகாரையை அகற்ற முடியாது

**இன, மதவாத கண்ணோட்டம் வேண்டாம் என்கிறார் சவேந்திர**

யாழ்ப்பாணம், தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள விகாரையை ஒருபோதும் அகற்றமுடியாது என்று பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30ஆம் திகதி அப்போது இராணுவத் தளபதியாக இருந்த சவேந்திர சில்வா அடிக்கல் நாட்டியிருந்தார். தனியார் காணிகளை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள மேற்படி விகாரையை அகற்றி அந்தக் காணிகளை விடுவிக்குமாறு கோரி மக்களால் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# 10 பேரின் பார்வை பாதிப்பு

இந்நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி முதல் சத்திரசிகிச்சைக்குள்ளான 10 நோயாளர்களே இவ்வாறு தொடர்ந்து சிகிச்சை பெற்றுவருவதாகவும் இதில் ஓரளவு கண் பார்வை குறைவாக இருந்து சத்திரசிகிச்சை செய்த பின் முற்றாக பார்வை இழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. பாதிக்கப்பட்ட அனைவரும் 50 வயதுக்கும் மேற்பட்டவர்களாக உள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்தவிடயம் தொடர்பாக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் மகேந்திர செனவிரட்னவிடம் வினவிய போது, இவ்விடயம் உண்மை. தேசிய வைத்தியசாலையில் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு தொகுதி ப்ரெட்னிசோலோன் மருந்தை பயன்படுத்தியமையால் ஏற்பட்ட சிக்கல் காரணமாகும் என நினைக்கின்றோம் என்றார்.

தற்போது அவர்கள் அனைவருக்கும் தீவிர சிகிச்சை செய்கிறோம். இன்னும் ஓரிரு தினங்களில் அவர்கள் குணமடைந்து விடுவார்கள் என நினைக்கின்றேன்.

மேலதிக தகவல்கள் எதுவும் நாங்கள் கூற முடியாது. இவ்விடயம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் தற்போது கண் அறுவை சிகிச்சையை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளோம் என்றார்.

# நாட்டில் தொற்று நோய்கள் அதிகரிப்பு

இன்புளூவென்சா, டெங்கு, வயிற்றுப்போக்கு, எலிக்காய்ச்சல் ஆகிய தொற்றுநோய்களுடன் கொரோனா தொற்றும் பரவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நாட்டில் மேலும் 3 கொரோனா தொடர்பான மரணங்கள் பதிவாகியுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# மூன்றாம் சார்ள்ஸ் மன்னருக்கு ஜனாதிபதி ரணில் பாராட்டு

இதன் போது மூன்றாம் சார்ள்ஸ் மன்னருக்கு வாழ்த்துகளை கூறிய ஜனாதிபதி, அவருடன் சுமூகமாக கலந்துரையாடலில் ஈடுபட்டதோடு, இச் சந்திப்பில் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்கவும் கலந்துகொண்டார்.

இம்மாநாட்டில் இளையோரின் பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையிலான கல்வி மறுசீரமைப்புகளை மேற்கொள்வதற்கு பொதுநலவாய அமைப்பு விரிவான திட்டங்களை முன்னெடுக்க வேண்டியது அவசியம் என ஜனாதிபதி வலியுறுத்தினார்.

# புதிய நியமனங்கள் ஆட்சிக்கு வழிசமைக்காது

2024ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை முதலில் நடத்துவதற்கு தற்போது பின்புலம் தயாரிக்கப்படுகின்றது. ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுமாயின் ஜனாதிபதியாக இந்நாட்டு மக்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரான எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவையே தெரிவு செய்வர் என்றும் திகாம்பரம் தெரிவித்தார்.

# தையிட்டி விகாரையை அகற்ற முடியாது

இந்நிலையில் இந்தப் போராட்டம் குறித்து கருத்து தெரிவித்துள்ள சவேந்திர சில்வா, குறித்த திஸ்ஸ விகாரை அரசின் முழுமையான அனுமதியுடன் இராணுவத்தினரின் வழிபாட்டுக்காக அமைக்கப்பட்டது என்றார்.

மேலும் இனவாத, மதவாதக் கண்ணோட்டத்துடன் இதனை நோக்குவதை தமிழ்க் கட்சிகளும் அவர்களது ஆதரவாளர்களும் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

# வவுச்சர் வழங்க ஜனாதிபதி அனுமதி

குறித்த யேசானைக்கு நிதி தெரிவுக்குழுவின் அனுமதியும் கிடைத்துள்ளதாக தெரிவித்த அமைச்சர், விவசாயிகளின் விருப்பத்திற்கேற்ப யூரியா, பாண்டி உரம் அல்லது கரிம உரங்களை கொள்வனவு செய்ய முடியும் என்றார்.

இந்தப் பணத்தைப் பயன்படுத்தி விவசாயிகள் அரச நிறுவனங்களிடமிருந்தோ அல்லது தனியார் நிறுவனங்களிடமிருந்தோ எந்தவோர் இடையூறுமின்றி சிறுபோகத்திற்கு தேவையான உரத்தை கொள்வனவு செய்ய முடியும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு போகத்திற்காக




ஹெக்டேயருக்கு 20 ஆயிரம் ரூபாய் வீதம் இந்த உர வவுச்சர் முறைமை தயாரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

# இம்மாத 3ஆம் வாரத்தில் இறுதி அறிக்கை

உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணயக்குழுவின் இடைக்கால அறிக்கை கடந்த 11ஆம் திகதி பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் கையளிக்கப்பட்டது.

அரசியல் கட்சி உறுப்பினர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள், இது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தும் பொதுமக்கள், தமது யோசனைகளை முன்வைக்க முடியும் என்று வழங்கப்பட்ட கால அவகாசம் கடந்த 27 ஆம் திகதியுடன் முடிவடைந்தது. இவ்வாறு முன்வைக்கப்படும் யோசனைகள் ஆராயப்பட்டு, அதில் உள்ள காரணிகள் இறுதி அறிக்கையில் சேர்க்கப்படுமென உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணயக்குழு குறிப்பிட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 4,000 ஆக குறைக்கும் நோக்கில் இந்த எல்லை நிர்ணய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற



அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் தினேஷ் குணவர்தன உள்ளூராட்சி மன்றங்களுக்கான எல்லை நிர்ணயத்துக்கான தேசிய குழுவொன்றை நியமித்திருந்தார்.

2022ஆம் ஆண்டு நவம்பர் 3ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக இந்தக் குழு நியமனம் குறித்து அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தக் குழுவின் தவிசாளராக முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நியமிக்கப்பட்டதுடன், வி.திஸாநாயக்க, எம்.எம். ஆர்.அதிகாரி, கே.தவலிங்கம், ஐ.ஏ.ஹமீட் ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் வறுமை வீதம் இரட்டிப்பாகியது

வங்கியின் இரு வருட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கு ஏற்படும் பல அபாயங்கள் காரணமாக அடுத்த சில வருடங்களில் வறுமை 25 சதவீதத்துக்கு மேல் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பொருளதார நெருக்கடியானது வறுமைக் குறைப்பு மற்றும் மனித மூலதன மேம்பாடு ஆகியவற்றில் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்தநிலையில் நாட்டின் பொருளாதாரம் இந்த ஆண்டும் அதற்கு அப்பாலும் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்ளும் என்றும் உலக வங்கி கணித்துள்ளது. இதன்படி நாட்டின் பொருளாதாரம் இந்த ஆண்டு 4.3 சதவீதம் சுருங்குகிறது.

எனவே நாட்டின் வளர்ச்சி வாய்ப்புகள், நிதி ஒருங்கிணைப்பு மற்றும் கடன் மறுசீரமைப்பின் முன்னேற்றத்திலேயே தங்கியுள்ளது.



அதிகரித்து வரும் உணவுப் பாதுகாப்பின்மை, ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் வளர்ச்சி குன்றியதை அதிகரிக்க வழிவகுத்தது என்பதுடன், 2021 ஆம் ஆண்டு 7.4 சதவீதத்திலிருந்து 2022 இல் 9.4 சதவீதமாக அதிகரித்துள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதுவே வலுவான மற்றும் நெகிழ்வான பொருளாதாரத்தை கட்டியெழுப்ப ஒரு வாய்ப்பாகவும் அமையும் என்றும் உலக வங்கி குறிப்பிட்டுள்ளது.

2023 மற்றும் 2024க்கான எதிர்மறையான பொருளாதாரக் கண்ணோட்டம் மற்றும் வருவாய் திரட்டும் சீர்திருத்தங்களின் பாதகமான விளைவுகள் வறுமை கணிப்புகளை மோசமாக்கலாம் என்று உலக வங்கி தெரிவித்துள்ளது.

# சிறுமியின் சடலம் நிர்வாணமாக மீட்பு

பின்னர், சிறுமியுடன் வந்த இளைஞரும் தம்பதியினரும் சில மணித்தியாலங்களுக்கு பின்னர் ஹோட்டலில் இருந்து வெளியேறியுள்ள நிலையில், ரயில் கடவையில் இருந்து சிறுமியின் நிர்வாண சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சந்தேகத்தின் அடிப்படையில் தம்பதியினர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார், சிறுமியுடன் வருகை தந்த இளைஞரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# உயர்நீதிமன்றை நாட வீரசேகர தீர்மானம்

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தலைமையிலான குழுவினர் சனிக்கிழமை (06) விஜயம் செய்துள்ளனர்.

மலையின் அனைத்துப் பகுதிகளையும் பார்வையிட்ட அவர், மலையில் சேதங்களை ஏற்படுத்தியமை தொடர்பாக உயர்நீதிமன்றத்தை நாடவுள்ளதாகத் தெரிவித்ததாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஆலயத்தில் இந்து சமயப்பேரவையின் ஏற்பாட்டில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றமையால் ஆலய நிர்வாகத்தினரும் அங்கு கூடியிருந்தனர்.

இதன்போது பிரதான காட்டுப் பாதையூடாக ஆலயத்துக்கு வருகை தருவோர் உழவு இயந்திரத்தைப் பயன்படுத்தி உள்வர வேண்டாம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மழை காரணமாக ஆலய வளாகத்தில் போடப்பட்ட தற்காலிக கொட்டகையையும் உடன் அகற்றுமாறும் நிர்வாகத்தினருக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

# 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

இதன்படி, பதுளை மாவட்டத்தின் பசறை பிரதேசம், காலி மாவட்டத்தின் நாகொட, எல்பிட்டிய, பத்தேகம, யக்கலமுல்ல பிரதேசங்கள் மற்றும் கேகாலை மாவட்டத்தின் யட்டியந்தோட்டை, ரம்புக்கன, தெரணியகல, மாவனெல்ல, கேகாலை, கலிகமுவ ஆகிய பிரதேசங்களுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், குருநாகல் மாவட்டத்தின் ரிதிகம, மாவத்தகம, அலவ்வ, பொல்கஹவெல மற்றும் மாத்தளை மாவட்டத்தின் பல்லேபொல பிரதேசங்களும் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேல், சப்ரகமுவ, வடமேல் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.


கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களின் பல இடங்களில் பிற்பகல் அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# தனுஷ்கோடியில் தஞ்சமடைந்தனர்

பெண்கள் உள்ளிட்ட 10 பேரை மெரைன் பொலிஸார் மீட்டனர்.

இவர்களை, மண்டபம் மெரைன் பொலிஸ் நிலையத்துக்கு பொலிஸார் அழைத்துச் சென்று விசாரித்தனர். அதில், இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால், அங்கிருந்து இந்தியா வந்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

அவர்கள், இலங்கை முல்லைத்தீவிலிருந்து மே 5ஆம் திகதி சட்டவிரோதமான படகில் புறப்பட்டு,



மறுநாள் அதிகாலை 2 மணிக்கு அரிச்சல்முனை மணல் தீடையில் இறக்கிவிடப்பட்டதாகவும், இதற்காக ரூ.1 இலட்சத்துக்கு 50 ஆயிரம் பணம் கொடுத்ததாகவும் தெரிவித்தனர்.

அவர்களிடம், மத்திய, மாநில உளவுப்பிரிவு பொலிஸாரும் விசாரணை நடத்தினர். இதைத் தொடர்ந்து, அவர்கள் மண்டபம் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் தங்க வைக்கப்பட்டனர்.

சட்டவிரோத மணல் அகழ்வுகள், போதைப் பொருள் கடத்தல்கள்

# பின்னணியில் கிளிநொச்சி பொலிஸார்

## சிறிதரன், கஜேந்திரன் எம்.பிகள் பகிரங்க குற்றச்சாட்டு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்று வரும் சட்டவிரோத மணல் அகழ்வுகள், போதைப் பொருள் கடத்தல்கள் என்பவற்றின் பின்னணியில், கிளிநொச்சி பொலிஸாரே இருந்து வருகின்றனர். சட்டவிரோத மணல் அகழ்வுகள் தொடர்பில் பொலிஸாருக்கு கடிதம் எழுதுகின்ற போது, அந்தக் கடிதத்தை மண் மாபியாக்களுக்கே காட்டியுள்ளனர் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம், மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற போது, கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் சட்ட விரோத மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை தொடர்பில், பிரதேச செயலாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இதையடுத்து, மணல் அகழ்வுகளின் பின்னணியிலும் போதைப் பொருள் வியாபாரத்தின் பின்னனியிலும் பொலிஸாரே செயற்பட்டு வருகின்றனர் என்று பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் பகிரங்கமாக சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பில், செ. கஜேந்திரன் எம்.பி தெரிவித்ததாவது; மாவட்டத்தில் இடம்பெறுகின்ற அத்தனை சட்டவிரோத செயல்களின் பின்னணியிலும் பொலிஸாரே இருக்கின்றார்கள். அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்க முடியாத அளவுக்கு, பொலிஸாரின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன என்றார்.

பொலிஸாரின் துணையுடனே மணல் அகழ்வுகள் இடம்பெறுகின்றன என்றும் எந்த விதமான அனுமதி பத்திரங்களும் வழங்கப்படாத நிலையில் கிராமப் புறங்களில் குறிப்பாக, கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட ஊரியான், கோரக்கண்கட்டு, கல்லாறு, தட்டுவன்கொட்டி ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியாக மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் இதன் பின்னணியில் பொலிஸாரே இருக்கின்றனர் என்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு சொந்தமான டிப்பர் வாகனங்களும் குறித்த மணல் அகழ்வுகளில் ஈடுபடுவதாகவும் பொது அமைப்புகளால் சுட்டிக்காட்டப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

புல்மோட்டையில்


## யானை தாக்கி வயோதிபர் உயிரிழப்பு

■ எப். முபாரக்

திருகோணமலை, புல்மோட்டையில் யானை தாக்கி வயோதிபர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று (07) இடம்பெற்றுள்ளது.

புல்மோட்டை 04, ஜின்னா நகரில் யானையின் அட்டகாசம் தொடர்ச்சியாக இருந்து வந்த நிலையில், நேற்று அதிகாலை, குடியிருப்பு பகுதிக்குள் யானை நுழைந்து, அட்டகாசத்தில் ஈடுபட்டிருந்தது. இதைத் தடுக்கும் முயற்சியில் சிலர் ஈடுபட்டு நிலையில், முன்னாள் தபால் ஊழியரான அப்துல் லத்தீப் அன்வர் (58 வயது) யானையின் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் உயிரிழந்துள்ளார். யானையின் அட்டகாசத்தால் சில வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் ஒரு வீட்டை உடைத்து, நெல் மூட்டைகளைக் சிந்திச்சிதறடித்து உள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

## அதே இடத்தில் விபத்து; பாரிய பாதிப்பு இல்லை



■ பி.கேதீஸ்

ஹட்டன்- நுவரெலியா பிரதான வீதியில் நானுஓயா- ரதெல்ல குறுக்கு வீதியில் வேன் ஒன்று சனிக்கிழமை (06) குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியது.

ரதெல்ல பிரதேசத்தில் இருந்து நுவரெலியாவை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போது, வேனில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக, வாகனத்தை கட்டுப்படுத்த சாரதிக்கு முடியாமல் போனது. அந்த வான் பின்நோக்கி சென்றே விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

இதில் பயணித்தவர்கள் சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கிறனர்.

இவ்விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ஜனவரி மாதம் 20ஆம் திகதி நானுஓயா- ரதெல்ல குறுக்கு வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஏழு பேர் உயிரிழந்ததுடன் 51 பேர் படுகாயமடைந்திருந்தனர். அந்த இடத்திலேயே இந்த வேனும் குடைசாய்ந்து விபத்துக்கு உள்ளாகியது.


## SALE OF REGISTERED VEHICLE

| DESCRIPTION | YOM | YARD |
|---|---|---|
| MAZDA 3 WP KH-XXXX | 2007 | 375/21/A, Makumbura, Pannipitiya, Kottawa |
| MAHINDRA BOLERO NW DAH-XXXX | 2019 | 375/21/A, Makumbura, Pannipitiya, Kottawa. |
| MAHINDRA FURIO 14 CC NW LO-XXXX | 2019 | 375/21/A, Makumbura, Pannipitiya, Kottawa. |
| TATA TIPPER WP LN-XXXX | 2017 | 375/21/A, Makumbura, Pannipitiya, Kottawa. |
| CHEVROLET SG KE-XXXX | 2007 | 375/21/A, Makumbura, Pannipitiya, Kottawa. |
| TOYOTA PRIUS WP CAH-XXXX | 2017 | 375/21/A, Makumbura, Pannipitiya, Kottawa. |
| TATA XENON3L WP PR-XXXX | 2011 | 375/21/A, Makumbura, Pannipitiya, Kottawa. |

Vehicle inspection daily from 9.00 AM to 3.00 PM
Offers are called for the sale of the above vehicle from 8th May 2023. Offer forms are available on non-Refundable payment of Rs. 300/- at
Pan Asia Bank, 135, Galle Road, Wellawatte, Colombo-6. Offers are accepted till 2.00 p.m on 12th May 2023

**Management reserves the right to cancel or withdraw any offers made in respect of above.**

Manager Recoveries
Pan Asia Banking Corporation PLC,
No. 135, Galle Road, Wellawatte, Colombo-6.
**Tel: 0114-343130, 0768 371 340, 0778 936 453**


## சிறைச்சாலையில் சாதித்த கைதிகள்

■ ரீ.எல் ஜவ்பர்கான்



சாதிப்பதற்கும் சாதனை புரிவதற்கும் அரங்குகளோ மேடைகளோ சிபாரிசுகளோ தேவையில்லை. திறமையும் விடாமுயற்சியும் இருந்தால் போதும் என்பதற்கு இந்தச் சிறைக்கைதிகள் நல்ல உதாரணம்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் சிறைவாசம் அனுபவித்து வந்த நான்கு இளைஞர்கள், சாரணர் ஜம்போரியில் சிறந்த சாரணர்களாகத் தெரிவு செய்யப்பட்டு, சான்றிதழையும் இலக்கங்களையும் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

கைதிகள் இருவர், ஏற்கெனவே விடுதலை செய்யப்பட்டிருந்த நிலையில், மற்றைய இரு கைதிகளும் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ், நேற்று முன்தினம் (06) விடுதலை செய்யப்பட்டதாக சிறைச்சாலை அத்தியட்சகர் என். பிரபாகரன் தெரிவித்தார்.

## சிசுவை விட்டுச்சென்ற 2 பிள்ளைகளின் தாய் கைது

■ மொஹொமட் ஆஸிக்



வெசாக் போயா தினமான வெள்ளிக்கிழமை (05), சிசுவை புத்தர் சிலைக்கு கீழே விட்டுச் சென்ற தாயொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் வத்தேகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எல்கடுவ, சின்னமோல பிரதேசத்திலேயே இடம்பெற்றுள்ளது.

மீட்கப்பட்ட நான்கு நாள்களான சிசுவின் தாய் கைது செய்யப்பட்டுள்ளார். 37 வயதான இவர், மாத்தளை பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டவர் என்று தெரியவருகின்றது.

திருமணமாகி இரண்டு பிள்ளைகளின் தாயான இப்பெண் மீது, அவரது கணவன் சந்தேகப்படுவதால், சிசுவை இவ்வாறு விட்டுச் சென்றதாக வாக்குமூலமளித்துள்ளார்.

கண்டி வைத்தியசாலையில் சிசு வைக்கப்பட்டுள்ளதுடன், அப்பெண்ணை தெல்தெனிய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## வீட்டின் மீது விழுந்தது டீசல் பௌசர்

■ ராமு தனராஜா



கொழும்பில் இருந்து, 33 ஆயிரம் லீற்றர் டீசலை ஏற்றிக்கொண்டு சென்ற பௌசர், ஹப்புத்தளை, பத்கொட பகுதியிலுள்ள வீடொன்றின் மீது, சனிக்கிழமை (06) விழுந்து விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

அதிகாலை 1.45 மணியளவில், இந்த விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவத்தில் காயமடைந்த குறித்த வாகனத்தின் சாரதி மற்றும் உதவியாளர் பங்கட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்

வீட்டுக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ள போதிலும் வீட்டுக்குள் இருந்தவர்களுக்கு எவ்விதமான பாதிப்புகளும் ஏற்படவில்லை. கசிந்த டீசலை, அப்பிரதேசத்தை சேர்ந்தவர்கள், தங்களது கைகளுக்கு கிடைத்த பாத்திரங்களில் பிடித்துச் சென்றனர்.




# வெற்றி, தோல்வி இரண்டையும் ஒருவரை சந்திக்க விடவேண்டும்

தங்களுடைய உயிர்களை மாய்த்துக்கொள்வது, யதார்த்தத்தில் சர்வ சாதாரணமான சம்பவங்களில் ஒன்றாகவே மாறிவிட்டது. முன்பெல்லாம் குடும்பத் தகராறு காரணமாகவே, யாராவது ஒருவர் தன்னுயிரை மாய்த்துக்கொண்டார் என கேள்விப்பட்டிருக்கின்றோம்; காலப்போக்கில், கடன் பிரச்சினை காரணமாக இடம்பெற்றது.

இன்னும் சிலவற்றை நோக்குவோமாயின் ஏன், எதற்கு என்ற தடயங்கள் இல்லாமலேயே தங்கள் உயிரை மாய்த்துக்கொண்டிருப்பர். தங்களை மட்டுமன்றி, குடும்ப அங்கத்தவர்களையே படுகொலை செய்திருப்பர். இவற்றுக்கெல்லாம் மனதுதான் பிரதான காரணங்களில் ஒன்றாக அமைந்துவிடுகின்றது.

தமது உயிரை மாய்த்துக்கொள்வோரில் பலர், தொடர் தோல்விளைச் சந்தித்திருக்க மாட்டார்கள். தொடர் தோல்விகளால் அடுத்து என்ன செய்வதென்று தெரியாமல் இருப்பர்; தனித்து இருப்பர்; இல்லையேல், பிரச்சினைகளை எதிர்கொள்ள தைரியமற்றவர்களாக வளர்க்கப்பட்டிருப்பர்.

மாணவர்களை பொறுத்தவரையில், எடுத்த எடுப்பிலேயே வெற்றிகளை தனதாக்கிக் கொள்வோர், சிறு தோல்வியைக் கூட தாங்கிக்கொள்ள மாட்டார்கள். தாங்கிக்கொள்ளும் அந்தப் பழக்கத்தை ஆரம்பத்தில் இருந்தே பழக்கப்படுத்த வேண்டும். தோல்விக்குப் பின்தான் வெற்றி; அதுவே நல்ல அனுபவம் என்பதை கற்றுக்கொடுக்கவேண்டும்.

அதனைவிடவும் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கை வளர்க்கவேண்டும். இது சந்தர்ப்ப சூழ்நிலையை பொறுத்து மாறுபடும். அதன்போது, அதற்கேற்றால் போல, தங்களை மாற்றிக்கொள்ளவேண்டும். துணிந்து நிற்கவேண்டிய இடங்களில் துணிந்து நிற்கவும்வேண்டும். இவற்றையெல்லாம் கற்பித்துக்கொடுக்கவேண்டும்.

எனினும், பொருளாதார சுமை காரணமாக, பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளை வீட்டிலிருக்கும் முதியோர்களிடம் விட்டுவிட்டு நகரங்களுக்கு இடம்பெயர்ந்துவிடுகின்றனர். எவ்விதமான கட்டுப்பாடுகளும் இன்றி, தான்தோன்றிதனமாக வளரும் பிள்ளைகள், தவறான முடிவுகளை எடுத்துவிடுகின்றனர். முகத்துக்கு பூசும் கிறீமை அண்ணா தனக்குத் தரவில்லை என்றொரு காரணத்துக்காக, தங்கையொருவர் தன்னுயிரை மாய்த்துக்கொண்ட சம்பவம் தலவாக்கலை பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் மனோதத்துவம் முக்கியத்துவம் பெறுகின்றது. உணர்வின் அடிப்படையிலான வாழ்க்கைச் சிக்கல்களைப் பக்குவமாக அவிழ்த்து, மனிதனுக்கே உரிய மாண்புகளை மருத்துவ ரீதியில் நமக்குத் தெளிவுபடுத்துகின்றது. அதனை கற்கவேண்டும்; புரிதல் அவசியமாகும்.

உளவியல் துறையின் பிரமாண்ட வளர்ச்சி, தனிநபர்களின் உடல்சார், அறிகைசார், சமூக, மனவெழுச்சிசார் மற்றும் ஒழுக்கம்சார் நடத்தைகள் என்பவற்றை தனித்தனியாக உள்ளடக்கியதாக தற்போது அமைந்துள்ளது. குறிப்பிட்ட வயது வரைக்கும், பிள்ளைகளை தங்களுடைய நேரடியான கண்காணிப்பின் கீழ் பெற்றோர் வளர்த்தெடுக்கவேண்டும். இல்லையேல், மேலே குறிப்பிட்ட சின்னச்சின்ன விடயங்களுக்கு எல்லாம் தீவிரமான முடிவுகளை பலரும் எடுத்துவிடுவர்.

பாடசாலைகளிலும் வீடுகளிலும் வெற்றி தோல்வி இரண்டையும் ஒருவரை சந்திக்கவிடவேண்டும். அதன்போதுதான் வாழ்க்கை நேரத்தியாக செதுக்கப்படும் என்பதை நினைவூட்டுகின்றோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

விருப்புடனும் வெறுப்புடனும் மனித வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கின்றது. இந்த நிலைமைக்கு பல காரணங்களும் உண்டு. சக்கரம் சுழலும் போது மாறி, மாறி அதே இடத்துக்கு வந்து, மீண்டும் பழையபடி, அதே மாதிரியே சுழலும். சந்தோசம் வரும்போது தம்மை மறக்கிறார்கள். சிலசமயம் கஷ்டங்கள் வரும்போது, அதுவே நிலையானது போல, கண்ணீர் விட்டு அழுகின்றார்கள். மீண்டும் நல்லவை நடந்தால், மகிழ்ச்சி; பின்னர் துயரம் என வந்து போகும் வாழ்க்கை சகஜமானது எனத் தெரிந்தும் கூட எவருமே, வாழ்க்கையின் நிஜ நிலையை உணர்வதில்லை.

'எல்லாமே வந்துபோகும்', 'இதுவும் கடந்து போகும்' என்பதால் மயக்கம் எதற்கு? நிரந்த அமைதி எப்போது வரும் எனப் பலர் அங்கலாய்க்கின்றார்கள்.

வாழ்க்கையின் நிலையாமையை அறிந்து தெளிய, ஞானம் வேண்டும் என ஆத்மிகம் சொல்கின்றது.

இதை உணர்ந்திட, மனம் சலனப்படாத நிலைமையை அடைந்திட வேண்டும். ஆசை, மோகம், சலனம் அகன்றால், ஆத்மா நிம்மதியடையும்.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கழிதங்கள்

### கிளிநொச்சியில் சிறுவர்கள் மத்தியில் அதிகரித்து வரும் கசிப்பு, போதைப்பொருள் பழக்கங்கள்

கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி, விற்பனை என்பன அதிகரித்துக் காணப்படுவதுடன், சிறுவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகும் நிலையும் காணப்படுகின்றது. அத்துடன், கிளிநொச்சி மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய கிராமங்களிலேயே இவை அதிகரித்துக் காணப்படுகின்றன.

அதாவது, கிளிநொச்சி மாவட்டத்தின் ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம், கல்மடுநகர், வட்டக்கச்சி, தர்மபுரம், கல்லாறு, புன்னைநீராவி, திருவையாறு, ஊரியான், கோரக்கன்கட்டு போன்ற பகுதிகளிலும் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இவ்வாறு கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்துக் காணப்படுவதால் மேற்குறித்த கிராமங்களில், பல்வேறு வகையான குற்றச்செயல்கள் இடம்பெற்று வருவதுடன், கூடுதலான சிறுவர்கள் கசிப்பு மற்றும் போதைப்பொருள் பாவனைகளுக்கு உள்ளாகி வருகின்றனர். குறித்த கிராமங்களில், கடந்த காலங்களில் குறைவாக காணப்பட்ட மேற்படி கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் போதைப்பொருள் பாவனையும் தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றது.

இவ்வாறு இளம் சந்ததியினராகிய நாளைய தலைவர்களைக் குறிவைத்து, கசிப்பும் போதைப்பொருளும் விற்பனை செய்யப்படுவதும் முக்கியமாக இந்தச் சட்டவிரோத செயற்பாடுகள் எந்தவித தடையும் இல்லாமல் அதிகரித்து வருகின்றமையும், குறித்த கிராமங்களில் வாழும் மக்களை வேரோடு கருவறுப்பது போன்றதாகும்.

இதைக் கட்டுப்படுத்த, பொறுப்பு வாய்ந்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேற்படி கிராமங்களின் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

–யது பாஸ்கரன்

இனப்பிரச்சினைத் தீர்வு பற்றி

# மீண்டும் பேசிய ஜனாதிபதி ரணில்



என்.கே அஷோக்பரன்

இலங்கையின் இனப்பிரச்சினையை இவ்வருட இறுதிக்குள் தீர்த்து வைப்பதில் ஆர்வமாக உள்ளதாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த திங்கட்கிழமை (01), தான் நிகழ்த்திய மே தின உரையில் மீண்டும் தெரிவித்துள்ளார்.

"இலங்கையில் உள்ள அனைத்து சமூகங்களுக்கும் நன்மை பயக்கும் கொள்கைகளுக்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டின் அடிப்படையில், நாட்டின் நீண்டகால இன மோதலைத் தீர்க்க, இந்த ஆண்டு இறுதிக்குள் ஓர் உடன்பாட்டை எட்ட எதிர்பார்க்கிறேன்" என்று குறிப்பிட்ட அவர், "இரண்டு நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால் மட்டுமே, நாடு சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்துடன் முன்னேற முடியும்" என்று தெரிவித்தார்.

அதில் ஒரு நிபந்தனையாக, இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்பதைக் குறிப்பிட்டிருந்தார். "இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக, தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்" என்று தெரிவித்த ஜனாதிபதி ரணில், "இந்த வருட இறுதிக்குள் ஏதாவது ஓர் உடன்பாட்டுக்கு வரமுடியும் என்று நம்புகிறேன். எந்த ஒரு சமூகத்தையும் நாம் குறைமதிப்புக்கு உட்படுத்தக் கூடாது. சிங்களப் பெரும்பான்மை, தமிழ், முஸ்லிம், பறங்கியர் மற்றும் ஏனைய சிறுபான்மையினரைப் பாதுகாத்து முன்னேற வேண்டும். அதை அடைவதற்கு நாம் அர்ப்பணிப்புடன் இருக்க வேண்டும்" என்றும் வலியுறுத்தினார்.

இதே ஜனாதிபதி ரணில் தானே, 2023 பெப்ரவரி நான்காம் திகதி, இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர், இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்றாரே; அது நடந்ததா என்ற கேள்வி, இங்கு எழுவது நியாயமானது.

ஆனால், 'ஒரு கை தட்டி மட்டும் ஓசை எழாது' என்பதை நாம் இங்கு புரிந்துகொள்ள வேண்டும். ஏதோவொரு விசித்திர காரணத்துக்காகத் தீவிர தமிழ்த் தேசியம் பேசாத, சமரசத்துக்குத் தயாரான தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கூட, ஜனாதிபதி ரணிலை எதிர்ப்பதை நோக்கமாகக் கொண்டு பயணிப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

2015-2019 'நல்லாட்சிக் காலத்தில்' ரணில் விக்கிரமசிங்கவிடம் 'ஜனாதிபதி' என்ற நிறைவேற்று அதிகாரமுள்ள பதவி இல்லாதபோது, அவரோடு இணைந்து, தீர்வுக்காக முயன்றவர்கள், இன்று அவர்களுக்கு மட்டுமே தெரிந்த காரணத்துக்காக, சமரசமான தீர்வொன்றை சாத்தியப்படுத்தக்கூடிய நிறைவேற்றதிகாரமும், அரசியல் சூழமைவும் கூடி வந்துள்ள தருவாயில், ஜனாதிபதி ரணிலை எதிர்ப்பதை முன்னிலைப்படுத்தி, தமிழ் மக்களின் நலனையும், இந்தத் தீவின் நலனையும் பின்னிலைக்குத் தள்ளிப் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இல்லை! ஜனாதிபதி ரணில் 13ஐ முழுமையாக அமல்படுத்துதல் என்றளவில்தான் இனப்பிரச்சினைக்கான தீர்வை அணுகுகிறார்; அது, தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைத் திருப்தி செய்யாது. ஆகவே, தமிழ்த் தேசிய கட்சிகள் இந்த முயற்சியில் பங்குதாரராகத் தேவையில்லை என்று கருத்துரைப்போரும் உளர்.

சரி! 13 வேண்டாம்; 13ஐ முழுமையாக அமல்படுத்த முயற்சிக்கிறேன் என்றவரும் வேண்டாம்; அடுத்தது என்ன? இந்தக் கேள்விக்கு அவர்களிடம் பதில் கிடையாது என்பதுதான் உண்மை.

காலம் முழுவதும், தமிழ் மக்களை உணர்வரசியலில் அழுத்திவைத்திருந்து, வடக்கு-கிழக்கு தமிழ் மக்களை இதே அவல நிலையில் தொடர்ந்து வைத்திருந்து, அவலத்தில் அரசியல் செய்வதுதான் திட்டமா?

ஜனாதிபதி ரணில் போனால், அடுத்து வரப்போகும் எந்தத் தலைமை இனப்பிரச்சினை தீர்வு பற்றி, குறைந்த பட்சம், 13ஐ முழுமையாக அமல்படுத்துவதைப் பற்றி அக்கறை கொள்ளப் போகிறது என்று இவர்கள் நினைக்கிறார்கள்?

ஐக்கிய மக்கள் சக்தியா? அவர்களும், அவர்களுடைய தலைவரும் இதுவரை இனப்பிரச்சினையொன்று இந்த நாட்டில் இருக்கிறது; அது தீர்க்கப்பட வேண்டும் என்றாவது பகிரங்கமாகச் சொல்லி இருக்கிறார்களா? இதைக் கூடச் சொல்லாதவர்கள், சமஷ்டி வழித் தீர்வா தரப்போகிறார்கள்?

ராஜபக்ஷர்களைப் பற்றி இந்த இடத்தில் பேசுவதே தேவையில்லாதது. 2009இன் பின்னர், இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை என்று சாதிப்பவர்கள் அவர்கள். ஒருவேளை ஜே.வி.பி இனப்பிரச்சினையத் தீர்த்து, தமிழ் மக்களுக்கு சமஷ்டித் தீர்வை வழங்கும் என்று இந்தத் தமிழ்த் தேசிய தலைவர்கள் நினைக்கிறார்களா?

ராஜபக்ஷர்களை விட மோசமான இனவாதிகள் அவர்கள். இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்படி இணைக்கப்பட்ட வடக்கு-கிழக்கை பிரிக்க, ஐக்கிய தேசிய கட்சியோ, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியோ தீவிரமாக முயலவில்லை. உயர்நீதிமன்றத்துக்குச் சென்று, வடக்கு-கிழக்கு இணைப்பு சட்டவிரோதம் என்று வழக்குத் தாக்கல் செய்து, பகீரதப்பிரயத்தனம் கொண்டு, வடக்கு-கிழக்கைப் பிரித்தவர்கள் ஜே.வி.பியினர்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாவதற்கு பின்னணியில், பிரசாரமாக இருந்தவர்கள்; ராஜபக்ஷர்களின் இனவாத அரசியலின் வழிகாட்டிகளாக இருந்தவர்களான இந்த ஜே.வி.பி, இனப்பிரச்சினைக்குத் தீர்வு தரும் என்று எப்படி நம்புகிறார்கள்.

"இலங்கையின் இனப்பிரச்சினை இன்றும் காணப்படுகிறது. அது தீர்க்கப்பட வேண்டும்" என்று பகிரங்கமாகச் சொல்கின்ற ஒரு ஜனாதிபதி இலங்கைக்கு இன்று கிடைத்திருக்கிறார். ரணில் விக்கிரமசிங்கவால் இதுவரை காலமும் பெரும்பான்மையின வாக்குகளைப் பெரும்பான்மையளவில் பெறமுடியவில்லை என்பதற்கு அவர் இனவாத அரசியலை முன்னெடுக்காதது முக்கிய காரணம்.

ஆனால், தமிழ்த் தேசிய அரசியல் கண்மூடித்தனமான நம்பிக்கைகளால் 'நரி' என்று பெயரிட்டு, அவரோடு பேச்சுவார்த்தை நடத்த விளையாததன் விளைவை, தமிழ்த் தேசிய அரசியல் இன்று கூடப் புரிந்துகொள்ளவில்லையென்றால், தமிழ்த் தேசிய அரசியலுக்கு உய்வில்லை.

ரணில் விக்கிரமசிங்க, சமஷ்டியைத் தரப்போவதில்லை; அது நிச்சயம். அடுத்த இரண்டு தசாப்த காலங்களுக்கு, இலங்கையில் அத்தகைய தீர்வொன்றை எந்தத் தலைமையும் தரப்போவதில்லை. அது நிச்சயம்! இலங்கையின் அரசியலும், அரசியலின் நாடித் துடிப்பும் தெரிந்த அனைவருக்கும், புரிந்த உண்மை இது.

இது, தமிழ்த் தேசியத்தின் தலைமைகளாக இருப்பவர்களுக்கும் தனித்த முறையில் நன்கே தெரிந்த விடயம். ஆனால், அவர்களது அரசியல், இதனை பகிரங்கமாகச் சொல்ல விடாது. அபிலாஷைகளை நோக்கிய பயணத்தில், இறுதி இலக்கை நோக்கிப் பயணிக்கலாம்; ஆனால், அடுத்த அடியில் இறுதி இலக்கு கிடைக்காவிட்டால், அடுத்த அடியையே நான், எடுத்து வைக்க மாட்டேன் என்பது அடி முட்டாள்தனமானது.

'அரசியல் என்பது சாத்தியமானவற்றின் கலை' என்ற ஒட்டோ வொன் பிஸ்மார்க்கின் கருத்தை நாம் தொடர்ந்து ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுதல் அவசியம்.

இன்று மாகாண சபை கூட இல்லாமல் இருக்கிறது வடக்கும் கிழக்கும்! 13ஆம் திருத்தம், முழுமையாக அமல்படுத்தல் என்பது வடக்குக்கும் கிழக்குக்கும் இன்றைய நிலையை விட மேம்பட்டதொரு நிலைதான். அதை அடைவதில் எந்தத் தவறும் இல்லை.

அரசியலில் தீர்வுகள் எதுவும் முடிந்த முடிபுகள் அல்ல. ஆகவே, படிப்படியாக பெறக்கூடியவற்றைப் பெற்று, அதை வினைத்திறனுள்ள முறையில் கையாண்டு, மக்களுக்கு நன்மைகளைப் பெற்றுக்கொடுத்து, தொடர்ந்து கொஞ்சம், கொஞ்சமாக கோரிக்கைகளை முன்வைத்து, அரசியல் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி அவற்றைச் சாத்தியமாக்கி, மேலும் அதிகாரப் பகிர்வுகளைப் பெற்றுக்கொண்டு, தொடர்ந்து பயணிப்பதுதான் சரியானதோர் அரசியல் பாதையாக அமையும்.

இதற்கு குறிப்பிடத்தக்க உதாரணம் ஸ்கொட்லாந்து. இதைச் சொன்னால், ஐக்கிய இராச்சியம் போல இங்கு அரசியல் இல்லை என்பார்கள். ஆனால், அது முழுமையான உண்மை இல்லை.

ஐக்கிய இராச்சியம் போல அரசியல் நாகரிகம் இங்கு இல்லாமல் இருக்கலாம்; ஆனால், வெஸ்ட்மின்ஸ்டர் முழுமையான விருப்போடு அதிகாரப் பகிர்வை ஸ்கொட்லாந்துக்கு வழங்கவில்லை. அதைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தமும், அரசியல் சூழ்நிலையும் ஏற்பட்டது.

அந்த அதிகாரப் பகிர்வுகள், அரசியல் சூழ்நிலையினதும், அதனை ஸ்கொட்டிஷ் தேசியவாசிகள் கையாண்ட விதத்தினதும் குழந்தைகள்தான். ஆகவே, இலங்கையின் அரசியலில் ஏற்படும் சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது, தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் கையில்தான் பிரதானமாக இருக்கிறது.

'அடித்தால் மொட்டை, வளர்த்தால் ஹிப்பி' என்ற ரீதியிலான கொள்கைப்பற்று பேச்சுக்கும், உணர்வெழுச்சிக்கும் பொருத்தமாக இருக்கலாம். ஆனால், நடைமுறை அரசியலுக்கு அது பொருத்தமானதல்ல.

'மணந்தால் மகாதேவன்; இல்லையேல் மரணதேவன்' என தமிழ்த் தேசிய அரசியல் பயணித்தால், மரணம் நிச்சயம்! இந்த ஜனாதிபதி 13ஐ முழுமையாக அமல்படுத்தல் என்றொரு முன்மொழிவை முன்வைக்கிறார்.

சரி! அதனைச் செய்யுங்கள் என்று செய்யவைத்து, இலக்கை நோக்கிய பயணத்தின் அடுத்த அடியை, தமிழ்த் தேசிய அரசியல் முன்வைக்காவிட்டால், இங்கு தோற்கப்போவது, தமிழ்த் தேசியத்தின்பால் நம்பிக்கை வைத்து வாக்களிக்கும் மக்கள்தான்!



# இலங்கையின் பல்பரிமாண வறுமை சுட்டெண் 2019 முடிவுகள்

வறுமைக்கு பல அம்சங்கள் இருக்கும் போது, குறிப்பாக ஊட்டச்சத்து மற்றும் அறிவாற்றல் வளர்ச்சி போன்ற குழந்தை பருவத்திலுள்ள பற்றாக்குறைகள் பற்றிய அனுபவங்கள் வாழ்நாள் முழுவதும் நீடிக்கும். எனவே நிலைபேறான அபிவிருத்தி இலக்கு (SDG) 1 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட 'எல்லா இடங்களிலும் வறுமையை முடிவுக்குக் கொண்டுவருவதல்' என்ற சர்வதேச சமூகத்தின் அர்ப்பணிப்புக்கு இணங்க, கல்வி, சுகாதாரம் மற்றும் வாழ்க்கைத் தரத்தில் உள்ள பற்றாக்குறைபாடுகள் உட்பட பணப் பற்றாக்குறைகளுக்கு அப்பால் தனிநபர்களுக்கான வறுமையை வெளிப்படுத்துகின்ற பல்வேறு வழிகளை இலங்கை அங்கிகரிக்கின்றது. 2021 ஆம் ஆண்டில், பல்வேறு இணைச் செயற்பாட்டாளர்களுடன் நெருக்கமான ஆலோசனையிலும் மற்றும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF), ஒக்ஸ்போர்ட் வறுமை மற்றும் மனித அபிவிருத்தியின் முன்முயற்சி (OPHI) எனும் அமைப்பு மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதரவுடனும், இலங்கையின் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் (DCS) ஆனது இலங்கைக்கான முதல் அதிகாரப்பூர்வ தேசிய பல்பரிமாண வறுமைச் சுட்டெண்ணை (தேசிய MPIஐ) உருவாக்கியது. இதற்காக குடித்தன வருமானம் மற்றும் செலவு பற்றிய அளவீடு- 2019 இன் தரவுகள் பயன்படுத்தப்பட்டன.

இலங்கையின் பல்பரிமாண வறுமைச் சுட்டெண் (MPI) ஆனது வறுமையின் ஒரு விரிவான முழுமையான காட்சியை உருவாக்குகிறது. ஏழை மக்கள் அனுபவிக்கும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட குறைபாடுகளின் ஒரு தொகுதியில் கவனம் செலுத்துவதன் மூலம், ஏழை மக்கள் யார் மற்றும் அவர்கள் எப்படி ஏழைகள் என்பதை இது வெளிப்படுத்துகிறது.

குழந்தைகளை மையமாகக் கொண்ட கொள்கைகளை மேலும் ஆராய்வதற்கும் ஆதரவளிப்பதற்கும், தேசிய பல்பரிமாண வறுமைச் சுட்டெண் MPI போன்ற அதே குறிகாட்டிகள், இலங்கையில் இரண்டு முக்கிய முக்கியத்துவம் வாய்ந்த குழந்தைக்கான பற்றாக்குறைகள், ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் குழந்தை பருவ வளர்ச்சி சேர்ந்து அடங்கும் 0-4 வயதுடைய குழந்தைகளுக்கான தனிப்பட்ட குழந்தை MPI வடிவமைக்கப்பட்டது.

தேசிய MPI உடன் நேரடியாகவும் துல்லியமாகவும் இணைக்கும் குழந்தை வறுமையின் முதல் உத்தியோகபூர்வ அளவீடாக இருப்பதில் இலங்கையின் குழந்தை MPI ஆனது முன்னோடியாக உள்ளது.

இலங்கை பல்பரிமாண வறுமைச் சுட்டெண் MPI என்பது நிலைபேறான அபிவிருத்தி இலக்கு SDG குறிகாட்டி 1.2.2 (தேசிய வரையறைகளின்படி அதன் அனைத்து பரிமாணங்களிலும் வறுமையில் வாழும் அனைத்து வயதுடைய ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளின் விகிதம்) என அறிவிக்கப்பட்டு, தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டு வெளியிடப்படும் பல பரிமாண வறுமையின் உத்தியோகபூர்வ நிரந்தர புள்ளிவிவரமாகும் மற்றும் பண வறுமை, அளவை பூர்த்தி செய்யப் பயன்படுகிறது.

இன்னும், பல்பரிமாண வறுமைச் சுட்டெண் MPI என்பது ஒரு புள்ளிவிவரம் மட்டும் அல்ல. இது ஒரு கொள்கைக்கான கருவியாகும். சமூக பிரிவுகளுக்கு, கவனம் செலுத்திய தலையீடுகள், கொள்கை வடிவமைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக்குரிய அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் பட்ஜெட் ஒதுக்கீடுகளை தெரிவிப்பதன் மூலம் - வரையறுக்கப்பட்ட வளங்களுடன் பல்வேறு பிரிவுகளில் வறுமைக் குறைப்பை விரைவுபடுத்துவதற்கு பொருத்தமான தகவல்களை வழங்குகிறது.

வெவ்வேறு பரிமாணங்களில் ஒரே நேரத்தில் பற்றாக்குறையைப் படம்பிடிப்பதற்கு மேலதிகமாக, தேசிய மற்றும் குழந்தை MPI க்கள் வயது, பாலினம் அல்லது இருப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் மேலும் பிரிக்கப்படலாம். கொள்கை தலையீடுகளை மையப்படுத்துவது எவ்வாறு என்பது பற்றிய விரிவான நுண்ணறிவுகளை வழங்குவதன் மூலம், யாருக்காக மற்றும் எங்கு, வறுமைக்கு பல்வேறு குறைபாடுகள் எந்த அளவிற்கு பங்களிக்கின்றன என்பதைக் காட்ட இது பயன்படுத்தப்படலாம்.

நாட்டில் ICT பயிலல் வாய்ப்புகளை

# மேம்படுத்தும் SLT–MOBITEL

SLT-MOBITEL இனால், விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் (STEM) ஆகிய கல்வியை ஊக்குவிப்பதற்கான அர்ப்பணிப்பை உறுதி செய்யும் வகையில், STEMUP கல்வி மையத்துடன் அண்மையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்தது.

STEMUP மையம் என்பது இலாப நோக்கற்ற அமைப்பாக உள்ளதுடன், மாணவர்களை STEM பட்டங்கள் மற்றும் தொழில்நிலைகளில் முன்னேறுவதற்கு ஊக்கமளிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது. இந்த உடன்படிக்கையில் பிரபாத் தஹாநாயக்க, SLT-MOBITEL குழும பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி மற்றும் பிரபாத் மன்னபெரும, பணிப்பாளர் (STEMUP Foundation) ஆகியோர் கைச்சாத்திட்டனர்.



SLT-MOBITEL மற்றும் STEMUP கல்வி மையத்தின் கைகோர்ப்பினூடாக, நாட்டில் STEM பயிலல் வாய்ப்புகளை விரிவாக்கம் செய்து, தொழில்நுட்ப புத்தாக்கங்களினூடாக அதிகளவு மேம்படுத்தப்பட்ட தேசிய பொருளாதாரத்தில் பங்களிப்பு செலுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.

இலங்கையின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கட்டமைப்பை மேம்படுத்துவதுடன், பொது மக்கள் மத்தியில் நிலைபேறான மற்றும் நீண்ட கால நிகழ்ச்சி நிரல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது, தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்ப உதவுவது போன்றவற்றில் கவனம் செலுத்துவதாக இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை அமைந்திருக்கும்.

உடன்படிக்கையினூடாக, SLT-MOBITEL மற்றும் STEMUP கல்வி மையம் ஆகியன 'CoderDojo' திறன் அபிவிருத்தி நிகழ்ச்சிகளை முன்னெடுக்கும். 'CoderDojo@SLT' Coding என்பது STEM கல்வியை அடிப்படையாகக் கொண்டதாகும். சிந்தனை ஆற்றல்கள், ஆக்கத்திறன், கைகோர்ப்பு மற்றும் தொடர்பாடல் ஆகியவற்றை உறுதி செய்வதாக அமைந்திருக்கும். இந்தத் திறன்விருத்தி நிகழ்ச்சிகளில் மாணவர்களுக்கு, தமது சொந்த ஆய்வு பிரச்சினைகள் மற்றும் மாறுபட்ட வழிகளில் தீர்வுகளை எய்துவதற்கு ஊக்குவிக்கப்படுவர்.

முக்கியமாக, 'CoderDojo @ SLT' நிகழ்ச்சித்திட்டத்தினூடாக, STEM கல்வியால் வழிநடத்தப்படும் சமூகம் தொடர்பில், அதிகளவு கவனம் செலுத்தப்படும் என்பதுடன், பிரதானமாக இளைஞர்களால் செயற்படுத்தப்படுவதாக அமைந்திருக்கும். தேசத்தின் திறன்கள் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கேள்விகள் ஆகியவற்றின் இடைவெளிகளை நிவர்த்தி செய்யும் வகையிலும் அமைந்திருக்கும். நாட்டை மதிநுட்பமான இலங்கையாக மாற்றியமைப்பதற்கு இது முக்கியமானதாகும்.

பிரபாத் தஹாநாயக்க, SLT-MOBITEL குழும பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில், "இளம் தலைமுறையினருக்கு STEM கல்வியைப் பெற்றுக் கொடுக்க எம்மை அர்ப்பணித்துள்ளோம். இலங்கையை அறிவு அடிப்படையிலான மதிநுட்பமான பொருளாதாரமாக மாற்றியமைக்க இது மிகவும் முக்கியமானதாகும். தொழில்நுட்ப புத்தாக்கத்தில் உறுதியான ஈடுபாட்டை ஏற்படுத்தி, பரந்தளவானோரை கவர்வது எமது இலக்காகும். அதனூடாக அவர்களின் தகவல் தொழில்நுட்ப கல்விக்கு வலுவூட்டி, டிஜிட்டல் பகுதியில் இயங்குவதற்கு அவர்களுக்கு உதவிகளை வழங்குவோம். SLT-MOBITEL மற்றும் STEMUP கல்வி மையத்தின் கைகோர்ப்பினூடாக, STEM தொடர்பான கைகோர்ப்பை விரிவாக்கம் செய்ய உதவியாக அமைந்திருக்கும் என்பதுடன், எதிர்காலத்தில் பணியிடங்களில் போட்டிகரமாக இயங்குவதற்கு அவசியமான திறன்களை இளம் தலைமுறையினர் கொண்டிருப்பதற்கு அவசியமான தொழில்நுட்ப அறிவையும், வாய்ப்புகளையும் வழங்குவதாக அமைந்திருக்கும்" என்றார்.



# முடிசூட்டு விழா

கடந்த 70 ஆண்டுகளாக பிரிட்டனின் ராணியாக இருந்த ராணி இரண்டாம் எலிசபெத், கடந்த ஆண்டு செப்டெம்பர் எட்டாம் திகதி தனது 96 வயதில் ஸ்கொட்லாந்தில் மரணமடைந்தார். அவரது மரணத்தைத் தொடர்ந்து, அவரது மூத்த மகனான சார்ள்ஸ் மன்னராக அறிவிக்கப்பட்டார்.

இந்த நிலையில், இலண்டனில் உள்ள வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்தில் சனிக்கிழமை (06) நடைபெற்ற நிகழ்வில், பிரிட்டன் மன்னராக சார்ள்ஸ் பதவியேற்றார். "அரசர் சட்டத்தையும் இங்கிலாந்து திருச்சபையையும் நிலை நிறுத்துவேன்" என்று அவர் உறுதிமொழி ஏற்றார். இதனைத்தொடர்ந்து தங்க அங்கி அணிவித்து, அரியணையில் அமரவைக்கப்பட்ட மன்னர் மூன்றாம் சார்ள்ஸுக்கு மகுடம் சூட்டப்பட்டது; கையில் செங்கோலும் அளிக்கப்பட்டது.

பிரிட்டனின் அரச அரியணையில், வயதான நிலையில் இருக்கும் ஒருவருக்கு மன்னர் மகுடம் சூட்டுவது, இதுவே முதல் முறை என்று கூறப்படுகிறது. நிகழ்வில் ராணி கமீலா, இளவரசர் வில்லியம், இளவரசி (வேல்ஸ்) கேட் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும், மன்னரின் இளைய மகன் ஹாரி கலந்துகொண்டார். ஆனால், அவரது மனைவி மெக்கல் மார்க்கல் நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை.

விழாவில் 10க்கும் மேற்பட்ட பாடல்கள் பாடப்பட்டன. அதில் முதன்முதலாக வேல்ஸ் மொழி பாடலும் பாடப்பட்டது. இந்த நிகழ்வில் உலகம் முழுவதிலும் இருந்து 2,000க்கும் அதிகமான பிரபலங்களும் விருந்தினர்களும் கலந்து கொண்டனர்.











பிரித்தானியா

# முடிசூட்டு விழாவை புறக்கணித்த மேகன்




பிரித்தானியாவின் புதிய மன்னராக 74 வயதான 3ஆம் சார்ள்ஸுக்கு நேற்று முன்தினம் (06) முடிசூட்டப்பட்டது.

இலண்டனில் தேம்ஸ் நதிக்கரையில் அமைந்துள்ள வெஸ்ட் மினிஸ்டர் அபேயில் மிகவும் பிரம்மாண்டமாக நடைபெற்ற இம்முடிசூட்டு விழாவில், உலகின் முன்னணி பிரமுகர்கள் உட்பட ஏராளமானோர் பங்கேற்றிருந்தனர்.

இருப்பினும் மன்னர் சார்ள்ஸின் இரண்டாவது மகனான ஹாரியின் மனைவி மேகன் மார்கல் முடிசூட்டு விழாவில் பங்கேற்காமல் புறக்கணித்தார்.


அரச குடும்பத்துடன் மோதல் ஏற்பட்டு, இளவரசர் ஹாரி மற்றும் மேகன் அரச கடமைகளை விட்டுவிட்டு, தங்கள் குழந்தைகளுடன் 2020ஆம் ஆண்டில் அரண்மனையை விட்டு வெளியேறி, அமெரிக்காவின் கலிபோர்னியாவில் குடியேறினர்.

இதற்கு முக்கிய காரணம் இளவரசர் ஹாரியின் மூத்த சகோதரரான இளவரசர் வில்லியம் மோதலில் ஈடுபட்டதாகவும், ஒரு முறை சண்டையின் போது, வில்லியம் தன்னை கொலரைப் பிடித்து அடித்து, தரையில் தள்ளினார் எனவும் ஹாரி வெளிப்படையாகப் புகார் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் தனது கணவருக்கு அரச குடும்பத்தில் ஏற்பட்ட அவமதிப்பை மனதில் வைத்து தான் மேகன் மற்றும் குழந்தைகள் முடிசூட்டு நிகழ்வில் பங்கேற்கவில்லை எனக் கூறப்படுகின்றது.

அமெரிக்கா

# வணிக வளாகத்தில் துப்பாக்கிச்சூடு



## 9 பேர் உயிரிழப்பு



வணிக வளாகமொன்றில் நேற்று முன்தினம் ( 06) மர்ம நபரொருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 9 பேர் உயிரிழந்த சம்பவம் அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் இடம்பெற்றுள்ளது.


டல்லாஸ் என்ற நகரில் உள்ள வணிக வளாகத்திலேயே இக்கொடூர சம்பவம் இடம்பெற்றுள்ளது. இத்துப்பாக்கிச்சூட்டில் குழந்தைகள் உட்பட 9 பேர் உயிரிழந்து இருப்பதாக முதல் கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் துப்பாகிச்சூடு நடத்தியவரும் உயிரிழந்து இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

போர்த்துக்கல்

# மது பிரியர்களின் நாடு

உலகிலேயே மது அருந்துபவர்கள் அதிகமாக இருக்கும் நாடாக போர்த்துகல் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

போர்த்துகலில் ஒவ்வொரு தனி மனிதனும் ஆண்டுக்கு சுமார் 52 லீற்றர் மது, அதாவது வாரத்திற்குக் கிட்டத்தட்ட ஒரு லீற்றர் மது அருந்துகின்றார்களாம்.

அதுமட்டுமல்லாது அந்நாட்டில் ஒருவர் போதைப்பொருள் வைத்திருப்பது சட்டப்படி குற்றமில்லை. ஆனால், போதைப்பொருள் வாங்குவதும் விற்பனை செய்வதும் குற்றமாகக் கருதப்படுகின்றது.

இச்சட்டம் 2001 ஆம் ஆண்டு அமல்படுத்தப்பட்டது. எனினும் இங்கு குற்றங்கள் மிகவும் குறைந்த அளவிலேயே இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகபட்ச குற்றத்துக்கு இங்கு 25 ஆண்டுகள் தான் தண்டனை வழங்கப்படுகிறது. இந்நாட்டில் மரண தண்டனை என்பது கிடையாது. அதனால் உலகின் பாதுகாப்பான நாடுகள் பட்டியலில் போர்த்துகலும் ஒன்றாகவுள்ளது. மேலும் இங்கு கல்வியறிவு விகிதம் 97 சதவீதமாக உள்ளது.

தனிநபர் மது நுகர்வில் 2 ஆம், 3 ஆம், 4 ஆம் இடத்தில் முறையே பிரான்ஸ், இத்தாலி, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

# திருமணத்தன்றே உயிரிழந்த மணமகள்

திருமணம் முடிந்த சில நிமிடங்களிலேயே மணப்பெண், வீதி விபத்தில் சிக்கி உயிரிழந்த சம்பவம் அமெரிக்காவில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவ தினத்தன்று தென் கரோலினா மாகாணத்தில் கடற்கரை வீதியில், திருமணம் முடிந்து மணமக்களான சமந்தா மற்றும் ஆரிக் ஹட்சின்சன் இருவரும் காரில் வீடு திரும்பிக்கொண்டிருந்தனர்.

இதன்போது எதிரே வந்த கார், எதிர்பாராத விதமாக மணமக்கள் வந்த காரின் மீது மோதியது. இக்கொடூர விபத்தில் சமந்தா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அதேசமயம் மணமகன் ஆரிக் ஹட்சின்சன் உட்பட அவரது உறவினர்கள் இருவரும் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.



தெலுங்கானா

# சிறுவனுக்கு பசை தடவிய வைத்தியர் கைது




தலையில் அடிப்பட்ட சிறுவனுக்கு வைத்தியர் ஒருவர் ‘பெவிக்குவிக்’ எனப்படும் உடைந்த பொருட்களை ஒட்டப் பயன்படுத்தப்படும் பசையைத் தடவிய சம்பவம் தெலுங்கானாவில் இடம்பெற்றுள்ளது.

லிங்கசூகூரைச் சேர்ந்தவர் வம்சி கிருஷ்ணா. இவர் தனது 7 வயது மகன் மற்றும் மனைவியுடன் திருமண சடங்குக்குச் சென்றுள்ளார்.

அங்கு குறித்த சிறுவன் விளையாடிக் கொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக கீழே விழுந்ததில் அவனுக்கு காயம் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து உடனடியாக வம்சி தன் மகனை அழைத்துக் கொண்டு அருகில் இருந்த தனியார் மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். அங்கு இருந்த மருத்துவர் அடிபட்ட தலையில் தையல் போடுவதை விட்டு விட்டு, ஃபெவிக்விக்கைத் தடவியுள்ளார். இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த பெற்றோர் மருத்துவமனையில் வாக்குவாதம் செய்யவே, நிர்வாகம் அலட்சியமாக பதிலளித்ததாகக் கூறப்படுகின்றது.

இதைத் தொடர்ந்து பொலிஸ் நிலையத்தில் புகாரளிக்கப்பட்ட நிலையில், பொலிஸார் அங்குள்ள மருத்துவர் மற்றும் உதவியாளர்களிடம் விசாரணை நடத்தினர்.

மேலும், சுகாதாரத் துறைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்ட நிலையில், அதிகாரிகள் தனியார் மருத்துவமனைக்கு சீல் வைத்தனர்.



ஸ்பானிய கோப்பா டெல் ரே தொடர்:

# சம்பியனானது றியல் மட்ரிட்

ஸ்பானிய கோப்பா டெல் ரே தொடரில் றியல் மட்ரிட் சம்பியனானது.

செவில்லாவின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான விலகல் முறையிலான இத்தொடரின் இறுதிப் போட்டியில் ஒஸசுனாவை 2-1 என்ற கோல் கணக்கில் வென்றே மட்ரிட் சம்பியனாகியது.

மட்ரிட் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் றொட்றிகோ பெற்றதோடு, ஒசசுனா சார்பாகப் பெறப்பட்ட கோலை லூகாஸ் டொரோ பெற்றிருந்தார்.

# ஐ.பி.எல்: பெங்களூரை வீழ்த்திய டெல்லி



இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), டெல்லியில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் உடனான போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பெங்களூர்

பெங்களூர்: 181/4 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: விராட் கோலி 55 (46), மஹிபால் லொம்ரோர் ஆ.இ 54 (29), பப் டு பிளெஸி 45 (32), அனுஜ் ராவட் ஆ.இ 08 (03) ஓட்டங்கள். பந்துவீச்சு: மிற்செல் மார்ஷ் 2/21 [3], அக்ஸர் பட்டேல் 0/17 [3])

டெல்லி: 187/3 (16.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: பில் ஸோல்ட் 87 (45), றீலி றொஸோ ஆ.இ 35 (22), மிற்செல் மார்ஷ் 26 (17), டேவிட் வோர்னர் 22 (14), அக்ஸர் பட்டேல் ஆ.இ 08 (03) ஓட்டங்கள்)

போட்டியின் நாயகன்: பில் ஸோல்ட்

இந்நிலையில், சென்னையில் நடைபெற்ற மும்பை இந்தியன்ஸுடனான போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் தோற்கடித்தது.

இதேவேளை கொல்கத்தாவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பஞ்சாப் கிங்ஸை கொல்கத்தா நைட் றைடர்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

# ஆர்சனல் செல்லும் றபின்ஹா?



ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவின் முன்களவீரரான றபின்ஹா, கழகத்தை விட்ட்டு பருவகால முடிவில் வெளியேற விரும்புவதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், 26 வயதான றபின்ஹாவை இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான ஆர்சனல் வேண்டுகின்ற நிலையில், செல்சி, நியூகாசில் யுனைட்டெட்டும் ஆர்வம் காட்டுகின்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாலிய சீரி ஏ தொடர்:

# லேஸியோவை வென்ற மிலன்

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற லேஸியோவுடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் ஏ.சி மிலன் வென்றது.

மிலன் சார்பாக, இஸ்மயில் பென்னக்கர், தியோ ஹெர்ணாண்டஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில், றோமாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் இன்டர் மிலன் வென்றது. மிலன் சார்பாக, பெடெரிக்கோ டிமார்கோ, றொமெலு லுக்காக்கு ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, சீரி ஏ சம்பியன்களாக நாப்போலி முடிசூடிக் கொண்டுள்ள நிலையில் அவ்வணி 80 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் புள்ளிகள் பட்டியலில் காணப்படுகின்றது. 64 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் லேஸியோவும், 63 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் ஜுவென்டஸும், அதே புள்ளிகளுடன் ஆனால் கோலெண்ணிக்கை வித்தியாசத்தில் நான்காமிடத்தில் இன்டர் மிலனும் காணப்படுகின்றது. இதில் லேஸியோவும், இன்டர் மிலனும் ஒரு போட்டி அதிகமாக விளையாடியுள்ளன.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 08 மே 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.